
# சிவபூமி யாழ்ப்பாணம் அரும்பொருட்காட்சியகம்

# ශිවභූමි යාපනය කෞතුකාගාරය

# Sivapoomi Jaffna Museum





## சிவபூமி அரும்பொருட்காட்சியகம் பிறந்த கதை




அன்னையும் பிதாவும் அப்புவும் ஆச்சியும் அவர் சந்ததியும் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்த திருநாடு எம் தாய்த் திருநாடு. எம் முன்னோர் ஆடியும் பாடியும் அழுதும் ஆறுதல் பெற்றும் தேடியும் சீராக வாழ்ந்தது இத்திருநாடு. இருந்த வளங்களை தம் இரு கரங்களால் சிந்தை பொங்கச் செழிப்புறச் செய்து மகிழ்வாய் வாழ்ந்ததும் இந்நாடே. அந்நியர் வருகை தந்து ஆட்சி செய்த போதும் பண்பாட்டை, பாரம்பரியத்தை, வழிபாட்டை, வாழும்முறையை உயிராய் பார்த்தவர்கள் எம் முன்னோர்களே. அவர்களின் அடிச்சுவடுகளை அடையாளத்திற்காவது காக்க வேண்டியது எம் அரும்பெரும் கடனாகும். அவ்வகையில் முன்னோர்க்குச் சமர்ப்பணமாக இந்த அரும்பொருட்காட்சியகம் எழுந்து நிற்கிறது.

இலங்கையில் தமிழ் மக்களின் பாரம்பரியப் பண்பாட்டினை வெளிப்படுத்தும் அரும்பொருட்காட்சி நிலையகங்கள் சீராக அமையாமை எம் தவக் குறைவே என்றோ ஒருநாள் எம் எதிர்காலச் சந்ததி எமது அடையாளங்களை எம் முன்னோர் பாதுகாக்கவில்லை என குற்றம் சாட்டுவது தவிர்க முடியாதது. கல்வியில் வல்லவர்களாக எம் முன்னோர்கள் இருந்தார்கள் என நாம் சொன்னாலும் கற்ற சமூகம் ஏன் ஆவணப்படுத்தவில்லை என்று அடுத்த தலைமுறை ஆச்சரியமாக கேட்கப்போகிறார்கள். இந்நிலையிலேயே சிவபூமி அறக்கட்டளையின் சார்பில் யாழ்ப்பாணம் நாவற்குழி ஏ9 வீதியில் சிவபூமி அரும்பொருட்காட்சியகம் உருவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டது.

சிறுவயதுமுதல் அரும்பொருட்கள் தொடர்பான ஆவல் சிறியேனிடம் இருந்தது, எனினும் அதற்கான சந்தர்ப்பங்கள் கிடைக்கவில்லை. 1995ம் இடப்பெயர்வுக்கு பின் எங்கள் பகுதிகளில் ஆவணங்கள், அரும்பொருட்கள், வரலாற்று தடயங்கள் எல்லாம் சிதைவுற்று அழிந்து போவதை காணக்கூடியதாக இருந்தது. பழம் பெரும் பொருட்களின் பெறுமதி குறித்து காப்பாற்றவேண்டும் என அரும்பாடுபட்டவர் கலைஞானி செல்வரத்தினம் அவர்கள், அவர்களது முயற்சி சொல்லில் வடிக்க முடியாது எனினும் அவர் தேடி வைத்த அரும் பொருட்கள் யாவும் போர்ச்சூழலில் அழிந்து தொழிந்து போய்விட்டன. அவரது மரணப்படுக்கையில் இருந்தவேளை வைத்தியசாலையில்

என்கரங்களைப் பற்றிப்பிடித்து அழுதார். என் செய்வது அவர் கதையும் முடிந்தது. அவரது இறுதி வைபவம் நல்லூரில் நாவலர் வீதியில் நடைபெற்றது. அஞ்சலி உரையில் அவரது கனவு நனவாக வேண்டும் என நான் உட்பட பலரும் பேசினோம். ஆனால் அரும்பொருட்காட்சியகத்தை உருவாக்க முடியவில்லை.

1999 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற சைவமகாநாட்டில் உரையாற்றுவதற்காக முதன்முதலாக நாடு கடந்து செல்லும் வாய்ப்பு எனக்கு கிட்டியது. இலண்டனில் எனது தாய்வழிச் சகோதரன் திரு சோமசுந்தரம் கனகசுந்தரம் (பொறியியலாளர்) அவர்கள் உலகப் பிரசித்தி பெற்ற இலண்டன் அரும்பொருட்காட்சியகத்திற்கு என்னை அழைத்துச் சென்றார். ஒரு நாள் முழுவதும் அரும்பொருட்காட்சியகத்திலேயே ஆவலாய் செலவு செய்தேன். அங்கிருந்த 60க்கும் மேற்பட்ட நடராஜர் விக்கிரகங்கள், எகிப்திய இறந்தோர் உடல்கள் என பலவற்றை கண்டு ஆச்சரியப்பட்டேன்; பின் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் சென்று அங்குள்ள அரும்பொருட்கள் நிலையங்களை கண்டு ஆச்சரியப்பட்டேன். பலநூறு வருடங்களுக்கு முன்வாழ்ந்த அறிஞர்கள், விஞ்ஞானிகள் மற்றும் சாதனையாளர் புகைப்படங்கள் யாவும் கண்டு வியப்புற்றேன். எங்கள் மண்ணில் எவற்றையும் நாம் பாதுகாக்கவில்லையே என்ற கவலை வருத்தியது. தொடர்ந்து இந்தியா, அமெரிக்கா, அவுஸ்ரேலியா, சிங்கப்பூர், மலேசியா, சுவிஸ், நியூசிலாந்து மற்றும் தாய்லாந்து என பலநாடுகளுக்குசெல்லும் வாய்ப்பு பெற்ற யான் அந்நாடுகளில் உள்ள அரும்பொருட்காட்சியகங்களை காணத்தவறவில்லை.




கட்டட நிர்மாணப் பணியில் சிவபூமி அரும்பொருட்காட்சியகம்

அமெரிக்காவுக்குச் சென்ற போது சுவாமி விவேகானந்தர் சிக்காகோவில் உரை ஆற்றிய இடத்தை பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டேன். உறவினர் இணுவில் செ. சண்முகபாஸ்கரன், விவேகானந்தர் பேசிய இடத்துக்கு அழைத்துச் சென்றார். சுவாமி நின்று பேசிய மண்டபத்தில் அவர் உரையாற்றிய இடத்தை குறித்துச் செப்புத் தகட்டில் அமெரிக்கர்கள் காட்சிப்படுத்தி இருந்தார்கள் அதிசயித்தேன். யான் ஆரம்பக்கல்வி கற்ற காலத்தில் சந்திரமண்டலத்திற்கு விஞ்ஞானி ஆம்ஸ்ரோங் தலைமையில் சென்றனர். அச்செய்தி பாடசாலை மாணவனாக இருந்த காலத்தில் பெரும் பரபரப்பாக இருந்தது. சந்திரமண்டலம் பயணக்கட்டுரை தொடர்பாக அன்றே ஆவலாய் படித்தேன். அமெரிக்கா புளோரிடா மாநிலத்தில் யான் தங்கியிருந்தபோது ஸ்கந்தா பழைய மாணவன் கிருஸ்ணர் பாலசுப்பிரமணியம் அவர்களிடம் நாஸா விண்வெளி ஆய்வு நிலையத்தை பார்க்க வேண்டும் எனக்கேட்டேன். அப்பெருமகனார் தனது செலவில் நாஸா விண்வெளி ஆராய்ச்சி நிலையத்திற்கு அழைத்துச்சென்று ஜோர்ஜ் கெனடி ஸ்பேஸ் என்ற விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தை காலையில் இருந்து மாலை வரை அணுஅணுவாக பார்ப்பதற்கு வாய்ப்புத்தந்தார். அப்பலோ-2 ராக்கட் இயந்திரம் முதல் பல்வேறு ஆவணங்களை, அரும்பொருட்களை கண்டு இன்புற்றேன். போட்ஸ்மைல் என்ற இடத்தில் வைத்திய நிபுணர் தேவகாந்தன் தனலட்சுமி அவர்களின் இல்லத்தில் தங்கியிருந்த போது விஞ்ஞானி தோமஸ் அல்வா எடிசன் வீட்டைப் பார்க்கின்ற வாய்ப்பு கிடைத்தது. அன்னார் கண்டு பிடித்த பொருட்களையும், அவரது படுக்கை உபகரணங்கள், ஆய்வுகூடம், அவருடைய கார் யாவும் பாதுகாக்கப்படுகின்ற சிறப்பை கண்ணாரக்கண்டேன். அன்று தொட்டு எம்மண்ணில் அரும்பொருட்காட்சியகம் உருவாக வேண்டும் எனும் தாகம் என் அகத்தில் அதிகரித்தது.

அன்று முதல் மீண்டும் பழைய பொருட்களை சேர்ப்பதில் ஆவல் கொண்டேன். தென்னிலங்கையில் சிங்கள மக்கள் அரும் பொருட்களை பாதுகாப்பதிலும் அவற்றுக்கான நிலையங்களை அமைப்பதிலும் மிகவும் அக்கறையாக உள்ளார்கள். அவர்களின் சில நல்ல செயற்பாடுகளை நாம் செய்யத்தவறிவிட்டோம். சிங்கள மன்னர்களுக்கு அவர்கள் நினைவு சின்னங்களை உருவாக்கியுள்ளார்கள். நாங்கள் சங்கிலியன் தோப்பை கூட சரியாக காவல் செய்ய முடியாது உள்ளோம். இந்நிலையில் எம் மண்ணை

ஆண்ட தமிழ் வேந்தர்கள் முக்கியமான இருபது மன்னர்களின் நினைவாக சிவபூமி அரும்பொருட்காட்சியகத்தில் சிலை நிறுவி உள்ளோம். அச்சிலைகள் ஊடாக எங்கள் வரலாறு எங்கள் எதிர்காலச் சந்ததியிடம் நின்று நிலவும். 17ஆண்டுகளாக அரும்பொருட்களை சிவபூமி அறக்கட்டளையின் கட்டடங்களில் மற்றும் எனது சகோதரனின் வீட்டிலும் சேர்த்துப் பாதுகாத்தேன். சிலர் பாராட்டினார்கள்' சிலர் பயன் விளங்காது திட்டினார்கள். என்றோ ஒருநாள் நான் தேடிய பொருட்கள் யாவற்றையும் எதிர்காலச் சந்ததிக்காக ஓர் அரும்பொருட்காட்சியகத்தை உருவாக்கி ஒப்படைக்க வேண்டும் என எண்ணினேன். அதனால் என் கனவு வளர்ந்தது. கற்பனை விரிந்தது. கையில் காசு ஏதும் இல்லாமலே பழம்பொருட்கள் விற்பனையாகும் இடத்துக்கு சென்று பார்த்துப் பார்த்து உள்ளத்தால் அழுதேன். ஊர் கடந்து, பிரதேசம் கடந்து எம் பண்பாட்டு அடையாளப் பொருட்கள் கைமாறுவது கண்டு உள்ளம் துடித்தது. இனிமேலும் அரும்பொருட்காட்சியகம் அமைக்காவிட்டால் பயனில்லை என்பதை உணர்ந்தேன். பலபிரமுகர்களிடம் இதைப்பற்றிச் சொல்லிப் பார்த்தேன், ஆனால் பயன் ஏதும் இல்லை.



எம் மண்ணை ஆட்சிபுரிந்த தமிழ் வேந்தர்கள்

ஆதரவு அற்றர்களின் பணி, ஆலயப்பணி, என சிவபூமியின் பணிகள் பெருகி விட்டது. ஆனால் பேரெண்ணம் கொண்ட என்னால் முடியவில்லை. நாவற்குழி திருவாசக அரண்மனைக்கு முன் நிலம் விற்பனையாவதை

அறிந்தேன். சிரமத்திற்கு மத்தியில் அறக்கட்டளையின் சார்பில் கொள்வனவு செய்தோம். என்றும் எனக்குக்கைகொடுத்து உதவும் மனிதநேய அமைப்பின் தலைவர் திருமதி கைலாசபிள்ளை அம்மாவிடம் முறையிட்டேன். தளமாடியை கட்டுவதற்கு நீங்கள் தான் பணம் தரவேண்டும் எனவும் வேண்டினேன். பெற்ற தாய் போல் அரவணைத்து உதவும் அம்மையார் முதலில் எனக்கு ஏச்சுத்தந்தார். உமக்கு இருக்கும் பொறுப்பு போதாது என்று இப்பணியை தொடங்க வந்துள்ளீர் என பேசினார், பின் என் அன்புத்தொல்லைக்கு ஆட்பட்டு அடிக்கல் நாட்டி தளமாடிக்கான நிதியை தாராளமாக வழங்கினார்.

அதனைத்தொடர்ந்து யாழ்இந்துக்கல்லூரியில் கற்ற என் ஆருயிர் நண்பர்களில் ஒருவர் ஆகிய வைத்திய நிபுணர் கந்தப்பிள்ளை பார்த்தீபன் எனக்கு கைகொடுத்தார். 34 வருடங்களுக்கு பின் என் வகுப்புத்தோழன் நிரமலன் மகேசன் லண்டனில் இருந்து வந்து நல்லூரில் என்னைத்தேடிச்சந்தித்தார். தானாகவே திருமுருகன் என்ன வேண்டும் எனக்கேட்டார். அரும்பொருட்காட்சியகப் பணிபற்றி விரித்தேன். ஒரு வாரத்தில் வங்கிக்கு பணம் அனுப்பி வைத்தார். மற்றும் பாலசிங்கம் (கணக்காளர்-இலண்டன்), கொழும்பு மாருதி நாணயமாற்று நிறுவன அதிபர் ரவீந்திரன், வைத்திய நிபுணர் தேவகாந்தன், திரு சி.சிவநாதன் (கனடா), டுபாய் திரு விக்கினேஸ்வரன், திரு.சி.கருணாகரன், வைத்திய நிபுணர் மனமோகன் தம்பதிகள் (அவுஸ்திரேலியா), இணுவில் திருவூர் ஒன்றியம் (கனடா), இரத்தினசபாபதி தபோதரன் (கனடா), ஜெயந்தன் சுமித்திரா தம்பதிகள் (கனடா), என்.ஜெகன் (ஈ-குருவி-கனடா), சங்கர்(ஈ-குருவி-கனடா), தேவமணி ஜெயராஜ்(ஈ-குருவி-கனடா), கனேஸ்வரன் பாலசுப்பிரமணியம் (ஈ-குருவி-கனடா), ரிச்மண்ட் கில் கோவில் சப்பரதிருப்பணிச்சபை (கனடா), ரிச்மண்ட் கில் கோவில் உபயகாரசபை (கனடா), வரசித்திவிநாயகர் ஐயா குடும்பம் (கனடா), சாயி இல்லம் (கனடா) எனவும் மேலும் சில அன்பர்கள் நிதி உதவி வழங்கினார்கள். அவுஸ்ரேலியாவில்வாழும் திரு குணசிங்கம் (யாழ் இந்துவின் மைந்தன்-Architect) அவர்கள் இலவசமாக படம் வரைந்து உதவினார். ஊரெழு சண்முகநாதன் சஞ்சயன் அவர்கள் கட்டடப்பொறுப்பை ஏற்று அழகாக கட்டி நிறைவேற்ற உதவினார்.

சிவபூமி அறக்கட்டளைக்கு பேருதவி புரிந்த அமரத்துவம் அடைந்த ஆசிரியை செல்வி வைத்திலிங்கம் கனகேஸ்வரி நினைவாகவும் மாடிக்கட்டடத்தின் ஒரு பகுதியை நிறைவேற்றுவது என எமது அறக்கட்டளை தீர்மானித்தது. இறையருளாலும் அன்பர்களின் ஆசியாலும் எமது அறக்கட்டளையின் நிர்வாகத்தின் உதவியாலும் இப்பாரிய பணியை இன்று நிறைவேற்றியுள்ளோம். இப்பணியில் துறைசார் பங்களிப்பை வழங்கிய இந்திய சிற்பக் கலைஞர் திரு.க.புருஸோத்தமன்' அவர்களுக்கும் தெல்லிப்பளை நவீன நுட்பக்கலைஞர் வே.பாலேந்திரன், அவர்களுக்கும், யாழ்ப்பாணம் வெஸ்டா விஸன் (Vesta vision) புகைப்படக்கலையகத்தின் இயக்குனர் திரு சிவஜீவன் அவர்களுக்கும் ஓவியங்களை நிர்மாணிப்பதற்கு உதவிய யாழ் பல்கலைக்கழக சித்திரமும் வடிவமைப்பும் துறைசார் சிரேஸ்ட விரிவுரையாளர் திரு சிவரூபன் அவர்களுக்கும் அவருடைய மாணவர்களுக்கும், பல்வேறு புகைப்படங்களை சேகரித்து உதவியபல்கலைக்கழக நூலகத்தில் பணியாற்றும் திரு தனஞ்சயன் அவர்களுக்கும் மற்றும் சில புகைப்படங்களை வழங்கிய திரு சர்வேஸ்வரா (விரிவுரையாளர்), பண்டிதர் கலாநிதி திருநாவுக்கரசு, திரு ச.லலீசன், திரு கஜீவன், திரு செல்வமனோகரன், கிழக்கிலங்கைசைவவித்தகர் கஜேந்திரன், கிழக்கிலங்கைசைவவித்தகர் சசிதரன் அவர்களுக்கும் எனது உடன் பிறந்த சகோதர சகோதரிகள் தங்கள் வீட்டில் உள்ள அரும்பொருட்களையும் என்னிடம் ஒப்படைத்தார்கள், மற்றும் அரும்பொருட்கள் பலவற்றை அன்பளிப்பாக வழங்கிய பெரியோர்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக. யாரையாவது தவறவிட்டிருப்பின் மன்னிக்கவும் அல்லும் பகலும் அனவரதமும் எண்ணத்தாலும் எழுத்தாலும் பாடுபட்டு உருவாக்கிய இப்பெரும்முதுசத்தை பொதுமக்களாகிய உங்களிடம் மனமுவந்து கையளிக்கிறேன். சூரிய சந்திரர் உள்ளவரை பெரும்பொருட்காட்சியகத்தை நிலைபெறவும் விருட்சமாக வளர அனைவரும் உதவுங்கள்.

அன்புடன்.

செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன்

தலைவர்- சிவபூமி அறக்கட்டளை

## THE STORY OF THE BIRTH OF SIVAPOOMI MUSEUM.

My native land is the place where my parents, grandparents and their ancestors lived for thousands of years. Their life was a bliss in the land singing and dancing while searching and preserving the resources that were available within their reach. Even though this land was conquered and ruled by foreigners, our ancestors carefully protected our culture, tradition, worship and life style. It is therefore our utmost obligation to safeguard the identity and thus in order to fulfill the duty, this museum stands today as an offering to our ancestors.

It is inevitable that our future generation would find fault with was pointing out our failure to protect our identity if we fail to document the evidences of our culture and tradition in a proper manner.

Our verbal boast that our ancestors were highly educated will be questioned by the next generations if we do not have any evidences to prove. Therefore, it is this realization that induced me to build the Sivapoomi museum at Navatkuli on behalf of the Sivapoomi Trust.

I have been interested in collecting antiques since my childhood but I did not have proper opportunities to do so. However, after the exodus in 1995, I witnessed the destruction of our ancestral documents and historical evidences in our native places. I recall the contribution of 'Kalaignani Selvaratnam' who toiled hard to protect these identities. It is really regretting that all his collections were destroyed during the time of displacement. I still remember the moment when Kalaignani Selvaramam cried holding my hands during his last days in the hospital. He is no more with us now and at his funeral tribute many of us indicated that his dreams should be made a reality. However the museum existed only as a dream.


It was the first opportunity that I received in 1999 to address at the 'Saiva conference' organized in London. At that time, my maternal cousin Mr.Somasundaram Kanagasuntharam, an engineer took me to the world famous London museum. I spent one whole day in that museum and to my surprise, I saw more than sixty 'Natarajah' statues, Egyptian mummies and various other items beautifully displayed in that museum. I was surprised at the display in the Cambridge University museum and the extent of interest they had shown to preserve the evidences of the scholars who lived hundreds of years ago.

While I was visualizing all the above, I had an awkward feeling in my mind realizing the truth that we had failed to preserve all our treasures in Jaffna.

Following the visit to England, I obtained the chance to go to countries such as India, America, Australia, Singapore, Malaysia, Switzerland, New Zeeland and Thailand never missed visiting the museums of these countries too.

I was eager to see the place in Chicago where Swami Vivekanandar addressed the gathering. Mr.S.Shanmugabaskaran from Inuvil took me to the spot and it was amazing to see how Americans had displayed the details in a copper plate. During my school days, I was attracted by the first landing of man on the moon. It was due to my interest, I searched and collected all the essays related to Neil Armstrong's landing on the moon and read every single information of the adventure. When I was staying in the state of Florida with Mr.Krishnar Balasubramaniam, an old student of Skandavarodaya College, I asked him to take me to Naza space research centre . That gentleman took me to Naza and provided an opportunity for me to enjoy the environment at the George Kennedy space Centre from morning till evening. I was able to visualize from the Appollo -II rocket engine to various other monuments and documents. Furthermore, I was able to visit the house where Thomas Alva Edison lived

during my stay in Portsmile with Dr.Thevakanthan Thanaluxmy. Edison's bed, his laboratory, his car and all his belongings were preserved and well displayed. By witnessing all these, my dream to have a museum of our own grew stronger in my mind. I started collecting our antiques from that day onwards.




**Old brasso antiques**

In Sri Lanka, it is observed that Sinhala society is highly interested in collecting their antiques and preserving them in suitable centres. They have created monuments of their ancient king, but it is extremely regretting that Tamil community in Jaffna is unable to safeguard even 'Sangiliyan Thoppu'. Considering the above thought, we have erected statues of twenty of our ancient kings with the fervent hope that our history would remain vivid with our future generation. I have been preserving the antiques for the last seventeen years in the buildings that belong to Sivapoomi Trust and at my brother's house. Some appreciated the task but some scolded me as if I was unnecessarily wasting my time. My dream to hand over the items and to display them at a museum grew stronger but making it a reality delayed due to lack of facilities and finance. My heart ached when witnessing how our traditional identities have changed and transferred from the native land and I realized that we should not further delay the setting up of a museum.

When I came to know that there was a land to be sold in front of 'Thiruvaasaga Aranmanai' we bought it with huge difficulty on behalf of Sivapoomi Trust. I requested help from Mrs.Kailasapillai who is the president of Humanitarian organization to construct the first floor of the museum and she who has always been affectionate as a mother, donated money as she did for many of our activities. She also expressed her concern over the overloaded activities that I undertake. Following her contribution, my dearest friend and classmate at Jaffna Hindu College Dr.Nirmalan Mahesan who met me at Nallur after 34 years volunteered and sent a cheque within one week. Further,Mr.Balasingam, an accountant from London, Mr.Raveendran, the proprietor of Maaruthy money exchange, Colombo, medical consultant Dr.Thevakanthan, Mr.C.Sivanathan from Canada, Mr. Vigneswaran- Dubai, Mr.C.Karunaharan, medical consultants Dr & Dr . Manamohan from Australia, Inuvil Thiruvoor Onriyam, Mr.Ratnasabapathy Thabotharan, Jeyanthan & Sumithra from Canada, N.Jegan, Sankar,Thevamani Jeyaraj & Ganeswaran Balasubramaniyam – all from e-Kuruvi Canada, Richmond Hill temple trustee, priest of Varasithy vinayagar temple & family, Sai illam-Canada and some others assisted financially. Mr. Gunasingam, an old boy of Jaffna Hindu College who lives in Australia volunteered to draw the plan of the museum for free and Mr. Sanjayan Shanmuganathan from Urelu accepted the responsibility of constructing the museum and completed his task efficiently. Our committee decided to allocate a portion of the upper floor to be named in memory of the philanthropist and former teacher late Miss. Vaithilingam Kanageswary to honour her immense contribution to Sivapoomi Trust. With the Grace of Almighty, the blessings of people and the help of our administrative staff the Sivapoomi Museum has become a blooming reality.

I would like to extend my gratitude at this juncture to Indian sculptor Mr.Prushothaman for his field oriented contribution and Modern technologist









































CEYLON
5
Sivapoomi
சிவபூமி

Mr.Balendran of Tellippalai, the director of Jaffna Vista Vision Mr. Sivajeevan , the Senior lecturer in Art & design at University of Jaffna Mr. Sivaruban and his students for their collection of photographs. I also wish to thank, Mr. Thananjayan who works at the Library of the Jaffna University,,Mr.Sarveswara, Pandithar.Dr.Thirunavukkarasu, Mr.Laleesan, Mr.Kajeevan, Mr.Selvamanoharan, Saivaviththahar Sasitharan and my siblings for handing over photographs and antiques to be displayed in the museum.

If I have left out anyone without mentioning here, hope you would forgive me as it is not intentional.

Today, I wholeheartedly hand over to the public this museum that became a reality out of continuous thoughts and deeds throughout day and night, it is my fervent hope that you all would collectively preserve this museum until the existence of Sun and moon and help to grow like a huge tree amidst us.

Thus, regards

Sensotselvar. Dr. Aaru.Thirumurugan

Chairman- Sivapoomi Charitable trust.

# සිවභූමි කෞතුකාගාරයේ උපත පිළිබඳ කතාව

මම දැනට ජීවත් වන්නේ මගේ දෙමව්පියන්, ආච්චිලා සීයලා සහ ඔවුන්ගේ මුතුන් මිත්තන් අවුරුදු දහස් ගණනක් ජීවත් වූ ප්‍රදේශයේයි .ඔවුන් දේශීය ගායනයන් හා නැටුම් වලින් ප්‍රීති වෙමින් ජීවත් වූ අතර ඔවුන්ට ලබා ගත හැකි සම්පත් සොයා බලා ඒවා අනාගත පරපුර උදෙසා සංරක්ෂණය කර ඇත .මෙම භූමිය විදේශිකයන් විසින් යටත් කර පාලනය කරනු ලැබුවද, අපේ මුතුන් මිත්තෝ අපගේ සංස්කෘතිය, සම්ප්‍රදාය, අභිචාර විදි සහ ජීවන රටාව ප්‍රවේශමෙන් ආරක්ෂා කළහ .ඔවුන් විසින් මහත් වෙහෙසක් දරා ආරක්ෂා කරගත් අනන්‍යතාවය ආරක්ෂා කර මතු පරම්පරාවන් දක්වා රැගෙන යාම අපගේ වගකීම වන බැවින් එම වගකීම ඉටු කිරීම සඳහා මෙම කෞතුකාගාරය අද අපගේ මුතුන් මිත්තන්ට කරන ලද ගෞරවයක් ලෙස නිර්මාණය කර ඇත .

අපගේ සංස්කෘතියේ හා සම්ප්‍රදායේ සාක්ෂි ලේඛනගත කිරීමට අප අපොහොසත් වුවහොත් අනාගතයේදී අපගේ අනාගත පරම්පරාව එය අප අතින් සිදු වූ විශාල වරදක් ලෙස දකිනු ඇත.

සිවභූමි භාරය වෙනුවෙන් නවට්කුලි හි සිවභූමි කෞතුකාගාරය ඉදිකිරීමට මා පෙලඹුණේ අපගේ මුතුන්මිත්තන්ගේ දැනුම ,උසස් සංස්කෘතිය හා කලාව පිළිබද සනාථ කිරීමට කිසිදු සාක්ෂියක් නොමැති උවහොත් අපගේ ඉදිරි පරම්පරාව විසින් අපගේ මුතුන්මිත්තන්ගේ දැනුම ,උසස් සංස්කෘතිය හා කලාව පිළිබද ප්‍රශ්න කිරීමට ඉඩ ඇති බැවිනි .

මගේ ළමා කාලයේ සිටම පුරාවස්තු එකතු කිරීමට මා උනන්දු වූ නමුත් ඒ සඳහා මට නිසි අවස්ථාවන් නොලැබුණි .කෙසේ වෙතත්, 1995 දී යුධ වාතාවරණය නිසා අපේ මුතුන්මිත්තන්ගේ

ලේඛන සහ අපේ උපන් ප්‍රදේශවල ඓතිහාසික සාක්ෂි විනාශ වී යනු මම දුටුවෙමි .මෙහිදී මෙම අනන්‍යතා ආරක්ෂා කිරීම සඳහා වෙහෙස මහන්සි වී වැඩ කළ" කලෙයිගානි සෙල්වරත්නම් "මහතාගේ දායකත්වය මට සිහිපත් විණි . අවතැන් වූ කාලය තුළ ඔහුගේ සියලු ඓතිහාසික එකතුන් විනාශ වීම ඇත්තෙන්ම කනගාටුවට කරුණකි .කලෙයිගානි සෙල්වරාම් මහතා රෝහලේ ගත කළ අවසන් කාලය තුළ මගේ දෑත් අල්ලාගෙන මා සමග දුක්මුසුව කතාකළ මොහොත තවමත් මාගේ මතකයේ ඇත .ඔහු දැන් අප සමඟ නොමැති අතර ඔහුගේ අවමංගල්‍ය උත්සවයේදී අපගෙන් බොහෝ දෙනෙක්ගේ අදහස වුයේ ඔහුගේ සිහින යථාර්ථයක් කළ යුතු බවයි .කෙසේ වෙතත් මෙතෙක් කෞතුකාගාරය පැවතියේ සිහිනයක් ලෙස පමණි.

1999 දී ලන්ඩනයේ සංවිධානය කළ' සයිවා "සමුළුව ඇමතීමට මට පළමු වතාවට අවස්ථාවක් ලැබිණි .එවකට මගේ මවගේ පාර්ශවයේ ඥාති සොහොයුරෙකු වූ" සෝමසුන්දරම් කනගසුන්දරම් "ඉංජිනේරු මහතා මාව ලෝක ප්‍රසිද්ධ ලන්ඩන් කෞතුකාගාරයට ගෙන ගියේය .මම මුළු දවසම එම කෞතුකාගාරයේ ගත කළ අතර, මා පුදුමයට පත් කරමින්, 'නටරාජා 'පිළිම හැටකට වැඩි ප්‍රමාණයක්, ඊජිප්තු මමී සහ වෙනත් විවිධ භාණ්ඩ එම කෞතුකාගාරයේ අලංකාර ලෙස ප්‍රදර්ශනය කර තිබෙනු මම දුටුවෙමි .කේම්බ්‍රිජ් විශ්ව විද්‍යාල කෞතුකාගාරයේ එතරම් කෞතුක වස්තුන් ප්‍රදර්ශනය කිරීම සහ මීට වසර සිය ගණනකට පෙර ජීවත් වූ විද්වතුන්ගේ සාක්ෂි ආරක්ෂා කර ගැනීමට ඔවුන් දක්වන උනන්දුව පිළිබද මා පුදුමයට පත් විය.

මෙවැනි දේවල් මා හට දකින්නට ලැබෙද්දී, යාපනයේ අපගේ සියලු කෞතුක වස්තු සුරැකීමට අප අපොහොසත් වී ඇති බව වටහා ගැනීමේදී ,මගේ සිතේ ඉතා අපහසු හැඟීමක් ඇති විය. එංගලන්ත සංචාරයෙන් පසුව, ඉන්දියාව, ඇමරිකාව, ඔස්ට්‍රේලියාව, සිංගප්පූරුව, මැලේසියාව, ස්විස්ටර්ලන්තය, නවසීලන්තය සහ තායිලන්තය වැනි රටවලට යාමට මා හට අවස්ථාව ලැබුණි .

චිකාගෝ හි විවේකානන්දර් ස්වාමි විසින් රැස්වීම ඇමතූ ස්ථානය දැකීමට මා මහත් උනන්දුවෙන් සිටියෙමි .එස් .ෂන්මුගබාස්කරන් මහතා ඉනුවිල් හි සිට මා එම ස්ථානයට ගෙන ගිය අතර ඇමරිකානුවන් තඹ තහඩුවක තොරතුරු ප්‍රදර්ශනය කර ඇති ආකාරය දැකීමෙන් මම පුදුමයට පත් වීමි .මගේ පාසල් කාලය තුළ අසන්නට ලැබුණු මිනිසා සඳ මතට ගොඩ බැස්සවීමේ පුවත මගේ සිත් ගත්තේය .ඒ පිලිබදව මගේ තිබූ උනන්දුව නිසා, මම නීල් ආම්ස්ට්‍රෝං සඳ මතට ගොඩබැමට අදාළ සියලු පුවත් විස්තර සොයා එම සියලු ත්‍රාසජනක තොරතුරක්ම කියවීමි "ස්කන්දවරෝදය" . විද්‍යාලයේ පැරණි සිසුවෙකු වන ක්‍රිෂ්නර් බාලසුබ්‍රමනියම් මහතා සමඟ මා ෆ්ලොරිඩා ප්‍රාන්තයේ නැවතී සිටින විට, මා නාසා අභ්‍යවකාශ පර්යේෂණ මධ්‍යස්ථානයට ගෙන යන ලෙස ඔහුගෙන් මම ඉල්ලා සිටියෙමි .එතුමා විසින් මා නාසා අභ්‍යවකාශ පර්යේෂණ මධ්‍යස්ථානයට වෙත ගෙන ගොස් ජෝර්ජ් කෙනඩි අභ්‍යවකාශ මධ්‍යස්ථානයට උදෑසන සිට සවස දක්වා ගත කිරීමට අවස්ථාවක් ලබා දුන්නේය "2-ඇපලෝ" .රොකට් එන්ජිමේ සිට වෙනත් ස්මාරක සහ ලේඛන දැක බලාගැනීමට මා හට අවස්ථාව ලැබිණි .තවද, මම පෝර්ට්ස්මයිල් හි නැවතී සිටි කාලය තුළ වෛද්‍ය දේවකාන්තන් ධනලක්ෂ්මි සමඟ තෝමස් ඇල්වා එඩිසන් වාසය කළ නිවස බැලීමට ගියෙමි .එඩිසන්ගේ ඇඳ, ඔහුගේ රසායනාගාරය, ඔහුගේ මෝටර් රථය සහ ඔහුගේ සියලු දේ සංරක්ෂණය කර හොඳින් ප්‍රදර්ශනය කර තිබිණි .මේ සියල්ල දැකීමෙන්, අපේම කෞතුකාගාරයක් නිර්මාණය කිරීමේ සිහිනය මගේ මනසෙහි ශක්තිමත්ව වර්ධනය විය .මම එතැන් සිට අපේ පුරාවස්තු එකතු කිරීමට පටන් ගතිමි.

ශ්‍රී ලංකාවේ සිංහල සමාජය ඔවුන්ගේ පුරාවස්තු එකතු කර සුදුසු මධ්‍යස්ථාන වල සංරක්ෂණය කිරීමට දැඩි උනන්දුවක් දක්වන බව දැකගත හැකිය .ඔවුන් සිය පුරාණ රජුගේ ස්මාරක නිර්මාණය කර ඇති නමුත් යාපනයේ සිටින දෙමළ ප්‍රජාවට 'සංගිලියන් තෝප්පු 'පවා ආරක්ෂා කිරීමට නොහැකි වීම අතිශයින් කණගාටුවට කරුණකි .ඉහත කරුණු සලකා බැලීමේදී, අපගේ ඉතිහාසය අපේ අනාගත පරම්පරාව සමඟ විචිත්‍රවත් වනු ඇතැයි යන දැඩි බලාපොරොත්තුව ඇතිව අපි අපගේ පුරාණ රජවරුන් විසි දෙනෙකුගේ ප්‍රතිමා ඉදිකෙරුවෙමු . මම පසුගිය අවුරුදු දාහත පුරාම සිවභූමි භාරයට අයත් ගොඩනැගිලිවල සහ මගේ සහෝදරයාගේ නිවසේ පුරාවස්තු සංරක්ෂණය කර ඇත්තෙමි .සමහරු එම කාර්යය අගය කළ නමුත් සමහරු මට දොස් පැවසුවේ මා අනවශ්‍ය ලෙස කාලය නාස්ති කරනවා යැයි ඔවුන් සිතූ නිසාය .කෞතුක භාණ්ඩ එකතු කර කෞතුකාගාරයක ප්‍රදර්ශනය කිරීමේ මගේ සිහිනය වඩාත් ශක්තිමත් වූ නමුත් එය යථාර්ථයක් බවට පත් කිරීමට ප්‍රමාද වූයේ අත්‍යවශ්‍ය සම්පත් හා මූල්‍ය පහසුකම් නොමැතිකම හේතුවෙනි .අප ජීවත්වන භූමියේම අපගේ සාම්ප්‍රදායික අනන්‍යතා වෙනස් වී යන ආකාරය දුටු විට මගේ හදවත වේදනාවට පත් වූ අතර කෞතුකාගාරයක් පිහිටුවීම තවදුරටත් ප්‍රමාද නොකළ යුතු බව මට වැටහුණි.

මේ අතර 'තිරුවාසග අරන්මනයි 'ඉදිරිපිට ඉඩමක් විකිණීමට ඇති බව දැනගත් විට අපි විශාල පරිශ්‍රමයක් දරා එය සිවභූමි භාරය වෙනුවෙන් මිල දී ගත්තෙමු .කෞතුකාගාරයේ පළමු මහල ඉදිකිරීම සඳහා" Humanitarian සංවිධානයේ සභාපතිනිය "වන කයිලාසපිල්ලෙයි මහත්මියගෙන් මම උපකාර ඉල්ලා සිටියෙමි . මවක් ලෙස සැමවිටම ආදරයෙන් බැඳී සිටින ඇය අපගේ බොහෝ ක්‍රියාකාරකම් සඳහා මුදල් පරිත්‍යාග කළාක් මෙන් මෙහිදී ද මුදල්

ආධාර පරිත්‍යාග කළාය .එමෙන්ම මා විසින් සිදු කරනු ලබන අධික බර වැඩ පිළිබඳව ඇය සිය කනස්සල්ල පළ කළාය .ඇයගේ දායකත්වයෙන් පසුව, යාපනය හින්දු විද්‍යාලයේ මගේ ආදරණීය පාසල් මිතුරියක වන වෛද්‍ය නිර්මලන් මහේසන් මහත්මිය වසර 34 කට පසු නල්ලූර්හිදී මා හමුවූ අතර ස්වේච්ඡාවෙන් ඉදිරිපත් වී සතියක් ඇතුළත චෙක්පතක් එවන ලදී .තවද, ලන්ඩනයේ ගණකාධිකාරී බාලසිංහම් මහතා, මාරුති මුදල් හුවමාරුවේ හිමිකරු රවීන්තිරන්, කොළඹ වෛද්‍ය උපදේශක වෛද්‍ය දේවකාන්තන්, කැනඩාවේ සී .සිවනාදන්, ඩුබායිහි විග්නේශ්වරන්, සී .කරුණාහාරන් මහතා ලියාවේඕස්ට්‍රේ ,වෛද්‍ය උපදේශක වෛද්‍ය මනමෝහන් මහතා, ඉනුවිල් තිරුවූර් ඔන්රියම් , රත්නසබපති තාබොතරන් මහතා, කැනඩාවේ ජයන්තන් මහතා සහ සුමිත්‍රා මහත්මිය, එන්. ජෙගන් මහතා, සංකර් මහතා, කැනඩාවේ දේවමානි ජෙයරාජ් මහතා සහ ගනේෂ්වරන් බාලසුබ්‍රමනියම් මාහතා-ඊ) - කුරුචි(, රිච්මන්ඩ් හිල් කෝවිල් භාරකරු, වරසිති විනායගර් කෝවිලේ පූජකතුමා සහ එම පවුලේ සියලු දෙනා, කැනඩාවේ සායී ඉල්ලම්- සහ තවත් සමහරු මුල්‍යමය වශයෙන් සහාය වූහ .ඕස්ට්‍රේලියාවේ වෙසෙන යාපනයේ හින්දු විද්‍යාලයේ පැරණි ශිෂ්‍යයෙකු වන ගුණසිංගම් මහතා කෞතුකාගාරයේ සැලැස්ම නොමිලේ නිර්මාණය කර දීමට ස්වේච්ඡාවෙන් ඉදිරිපත් වූ අතර ඌරළුහි සංජයන් ෂන්මුගනාදන් මහතා කෞතුකාගාරය ඉදිකිරීමේ කටයුතු වල වගකීම භාරගෙන සිය කාර්යය කාර්යක්ෂමව නිම කළේය .සිවභූමි භාරය වෙනුවෙන් කළ ඉමහත් දායකත්වයට ගෞරව දැක්වීම සඳහා දානපතිනියෙකු හා හිටපු ගුරුවරියක් වූ දිවංගත වයිතිලිංගම් කනකේෂ්වරී මෙනවිය සිහිපත් කිරීම සඳහා ඉහළ මහලේ කොටසක් ඇය වෙනුවෙන් නම් කිරීමට අපගේ කමිටුව තීරණය කළේය.

අද වන විට සියලු දෙවියන්ගේ කරුණාවෙන්, ජනතාවගේ ආශිර්වාදය සහ අපගේ පරිපාලන කාර්ය මණ්ඩලයේ සහාය ඇතිව සිවභූමි කෞතුකාගාරය යථාර්ථයක් බවට පත්ව ඇත .

මෙම අවස්ථාවෙහිදී ඉන්දියානු මූර්ති ශිල්පී පුරුෂෝත්තමන් මහතා සිය ක්ෂේත්‍රයට නැඹුරු වූ දායකත්වය සහ නූතන තාක්ෂණ විද්‍යා තාක්ෂණවේදියෙක් වන තෙලිපලෙයිහි බාලේන්ද්‍රන් මහතා, යාපනය විස්ටා විෂන් හි අධ්‍යක්ෂ ශිවජීවන් මහතා , ඡායාරූප එකතුව සඳහා යාපනය විශ්ව විද්‍යාලයේ කලා හා නිර්මාණ පිළිබඳ ජ්‍යෙෂ්ඨ කථිකාචාර්ය සිවරූබන් මහතා සහ ඔහුගේ ශිෂ්‍යයන් වෙත මාගේ කෘතගුණය පළ කරමි .මීට අමතරව කෞතුකාගාරයේ ප්‍රදර්ශනය කිරීමට නියමිත ඡායාරූප හා පුරාවස්තු භාර දීම සම්බන්දයෙන් යාපනයේ විශ්ව විද්‍යාලයේ පුස්තකාලයේ සේවක මහතා , සර්විශ්වරාමහතා, ආචාර්ය තිරුනාවුකරසු මහතා, ලලීසන් මහතා, කජීවන් මහතා, සෙල්වමනෝරන් මහතා, කජේන්ද්‍රන් මහතා ,සසිතරන් මහතා සහ මගේ සහෝදර සහෝදරියන් වෙත මාගේ හදපිරි ස්තුතිය පුද කර සිටිමි. මෙහිදී මා හට නම් සදහන් කිරීමට අතපසු වූ අයෙකු සිටිනම් ඒ සඳහා ඔබ සියලු දෙනාගෙන් සමාව ඉල්ලා සිටිමි.

දිවා රෑ නොබලා අඛණ්ඩ සිතුවිලි හා ක්‍රියාවන්ගේ යථාර්ථයක් බවට පත්ව ඇති මෙම කෞතුකාගාරය අද මම මුළු හදින්ම මහජනතව වෙත භාර දෙමි .චිරාත් කාලයක් අප අතර විශාල වෘක්ෂයක් මෙන් ඔබ සැවොම මෙම කෞතුකාගාරය සාමූහිකව සංරක්ෂණය කර සංවර්ධනය කිරීමට උපකාරී වනු ඇතැයි යන්න මගේ ඒකායන බලාපොරොත්තුවයි.

Thus, regards

Sensotselvar. Dr. Aaru.Thirumurugan

Chairman- Sivapoomi Charitable trust.

Translate by: W.A.I.Madhusanka

Management Studies-University College of Matara

[illegible]

[illegible]

Thus, regards

Senaseelvar. Dr. Aaru Thirumurugan

Chairman- Sivapoomi Charitable trust.

Translate by: W.A.T.N.Dilhanika

Management Studies- University College of Matara



சிவபூமி அரும்பொருட்காட்சியகம்,
இல 50,கண்டி வீதி, நாவற்குழி
(சிவபூமி திருவாசக அரண்மனை முன்பாக)
021-205-2585

## Sivapoomi Jaffna Museum.

**NO-50, Kandy Road, Navatkuli**
(In front of Sivapoomi Thiruvasaga Aranmanai)




Guide Book Editor - V. Srivishagan

கையேடு தொகுப்பாசிரியர் :-வி.ஸ்ரீவிசாகன்